# உயிர் தியாகிகள்

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது**

**நேசம் கொண்டவர்களுக்கு**

**ஓர் ஆறுதலான அறிவுரை**

**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது** (அய்யதஹுல்லாஹ்)

(உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம்)

தமிழாக்கம்

**மவ்லவி M. ரஃபீக் அஹ்மது H. A.**


வெளியிடுவோர்

தமிழக புத்தக வெளியீட்டுக் குழு (வட மண்டலம்)

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம், சென்னை- 600 024



Copyrights Reserved


**Ouyir Thiyaakigal**

**Translation of the Urdu Speech delivered**

**by Hadhrat Mirza Masroor Ahmad**

**Khalifathul Masih - V**

**(The Head of the Worldwide Ahmadiyya Muslim Jamaath)**
**On 27th June 2010 at the annual convention of the Ahmadiyya Muslim community in Germany on the Topic Martydom of Ahmadiyyath**

**Translated By**
**Movlavi M. Rafeeq Ahmad H.A**


**First Edition** **February 2011**
**Copies** **1000**

This book was released by **Moulana Muhammad Inaam Gouri Sahib,** the Chief Secretary of Ahmadiyya Muslim Jamaath in India, during the Tamilnadu North Zone Zonal Conference held at Coimbatore on 27th February 2011

Published by :

**Tamilnadu Book Publishing Committee (North Zone)**
**AHMADIYYA MUSLIM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024. Tamilnadu. India
**Website: www.alislam.org\tamil**
**E-mail: amjchennai@yahoo.in**

For:
**NAZAARAT NASHR-O-ISHAAT**
Sadr Anjuman Ahmadiyya, Qadian

بِسْمِ اللّٰهِ الرَّحْمَنِ الرَّحِيم

## முன்னுரை

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது பேரன்பு கொண்டவர்களக்கு வழங்கியுள்ள உருக்கமான அறிவுரை.

அருளுக்குரிய ஜுமுஆ நாளான 2010ஆம் ஆண்டு மே மாதம் 28ந் தேதி லாஹூரிலுள்ள இரண்டு அஹ்மதிய்யா பள்ளிவாசல்களில் இருந்த தொழுகையாளிகளின் மீது நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் ஒட்டுமொத்தமாக 86 அஹ்மதிகள் ஷஹீதானார்கள். இதை கண்ட, நல்லியல்பு கொண்ட நீதியை விரும்புகின்ற ஒவ்வொரு மனிதனும் இக்கொடூர செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்கள். இந்தியாவிலும் கூட பல பத்திரிகைகளும் நல்லியல்பு கொண்ட மக்களும் இந்த அநீதிக்கும், கொடூர செயலுக்கும் எதிராக பகிங்கரமாக கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

'எதிரிகளின் கூச்சல் அதிகமாகும்போது - எங்களது அன்பான இறைவனோடு நாங்கள் ஒன்றி விடுகிறோம்' (இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரியாகும்-மொழிபெயர்ப்பாளர்)

அதாவது எதிரி தனது கூக்குரலிடுவதிலும், தீங்கு விளைவிப்பதிலும் முன்னேறுகின்றபோது நாம் இன்னும் அதிகமாக நமது இறைவனின் அடைக்கலத்தின் கீழ் வந்துவிடுவோம் என்பதுதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர் நடவடிக்கையாக இதுவரை இருந்திருக்கின்றது. இப்போதும் இருந்து வருகிறது.

லாஹூரிலுள்ள அஹ்மதிகளும், பாகிஸ்தானிலுள்ள எந்த ஒரு இடத்தை சார்ந்த அஹ்மதியும், உலகில் 198 நாடுகளில் வாழ்கின்ற அஹ்மதிகளில் எவரும் இதற்காக எந்த ஊர்வலத்தையும் நடத்தவில்லை. பந்து, போராட்டத்தில் ஈடுபடவில்லை. டையர்களை எரிக்கவில்லை. சமுதாய சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கவில்லை. ஆயினும் இறைவனது தடிக்கு அஞ்சுங்கள். அதிலிருந்து சத்தம் வருவதில்லை என்று கூறி தனது சமுதாயத்தினரை அவர்கள் கண்டித்து எச்சரிக்கை செய்துள்ளனர்.

2010ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ந் தேதி ஜெர்மனியில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் நிறைவுரையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அய்யதஹுல்லாஹுத் தஆலா அவர்கள் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள உறுப்பினர் களுக்கு அவர்கள் நன்மையிலும், இறையச்சத்திலும் முன்னேறியவாறு அல்லாஹ்விடம் துஆக்கள் செய்யுமாறு போதனை வழங்கியிருப்பதுடன் குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்திற்கு, அஹ்மதிய்யா ஜமாஅத்தை அவர்கள் வீணாக எதிர்த்து மனிதத்துவத்தை சீர்குலைக்கின்ற செயல்கள் தொடர்பாக அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதுடன் இறைவனுக்கு அஞ்சுவது பற்றி அவர்களுக்கு நினைவூட்டியவாறு காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச்செய்தியையும், அன்னாரது உயர்தகுதியையும் மிகவும் எளிய நடையில் விளக்கி கூறியுள்ளார்கள்.

பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த உரையை முழுமையாக புத்தக வடியில் அச்சிட்டு வெளியிடுகிறோம். அல்லாஹ் எல்லா வகையிலும் இதனை மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக ஆக்குவானாக. ஆமீன்.

**நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது**

**காதியான்**

மர்ஹூம் A.M.S. ஷரீஃப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகளும் மர்ஹூம் H.M. ஜிஃப்ரி சாஹிபின் மருமகளுமாகிய ஜனாபா மன்ஸூரா சித்தீகா அவர்கள் மர்ஹூம்களின் நினைவாக இப்புத்தகத்தை வெளியிட பொருளுதவி வழங்கியுள்ளார். அவர்களுக்காக வாசகர்கள் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகிறோம். - ***வெளியீட்டாளர்***

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيم

# உயிர் தியாகிகள்

கடந்த சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிலுள்ள லாஹூரில் அஹ்மதிகள் மீது நடைபெற்ற தாக்குதலில் ஜமாஅத் சகோதரர் ஜுமஆ நடைபெற்று கொண்டிருந்த சமயத்தில் கொடூரமாகவும், மிருகத்தனமாகவும் ஷஹீதாக்கப்பட்டனர். 17 அல்லது 18 வயதுடைய இளைஞர்களிலிருந்து 92 அல்லது 93 வயது வரையுடைய முதியவர்கள் வரை எல்லோரது இரத்தமும் சிந்தப்பட்டிருப்பது. கொடுமையின் கீழ்த்தரமான உதாரணத்தை நிலைநிறுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது. சட்டத்தை செயல்படுத்தக்கூடியவர்கள் தங்களது ஏதோ சுயநலனை கருத்தில்கொண்டு இந்த இரத்தத்தை ஓடச் செய்துள்ளனர். சரியான நேரத்தில் அவர்கள் உதவி செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால் பல விலைமதிப்புள்ள உயிர்கள் காப்பாற்றப் பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியிப்பது போன்று பெரும்பாலான அஹ்மதிகள், ‘நான் எனது மனவருத்தத்தையும், கவலையையும் அல்லாஹ்விடமே முறையிடுகின்றேன்’ (12:87) என்பதற்கேற்பவே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே, நமது முறையீடுகள், துன்பத்திற்காளானவர்களின் துஆக்கள், அல்லாஹ்வின் முன்னிலையில் இருக்கும். இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு





கூறுகின்றான்: துன்பத்திற்குள்ளானவரின் துஆக்களை கேட்பவன் நான்தான். எவர்கள் துன்பத்தில் இருக்கின்றார்களோ, எந்த மக்கள் மீது கொடுமை இழைக்கப்படுகின்றதோ, எவர்கள் உயிர் வாழ முடியாமல் துன்புறுத்தப்படுகின்றார்களோ, அவர்கள் நிம்மதியிழந்து என்னை அழைகின்ற போது நான் அவர்களது துன்பங்களை அகற்றுகின்றேன். அல்லாஹ் கூறுகின்றான்:

‘‘துன்பத்திற்காளானவர் அவனிடம் பிரார்த்தனை செய்யும்போது அவரது பிரார்த்தனையை கேட்டு (அவரது) தீங்கை அகற்றி (துஆ செய்கின்ற மனிதர்களாகிய) உங்களை ஒரு நாள் இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன்? இந்த எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்ற அல்லாஹ்வை தவிர வேறு வணக்கத்திற்குரியவர் உண்டா? மிகச் சிலரே போதனையிலிருந்து பலன் பெறுகின்றனர்.’’ (27:63)

எனவே, எல்லா ஆற்றல்களுக்கும், எஜமானனாகவும் எல்லா முழுமையான நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டவ னுமாகிய அந்த இறைவனை ஏற்றுக்கொண்டவர்களாக நாங்கள் இருக்கின்றோம். இறைவன் முதலில் கேட்டுக்கொண்டிருந்தான். இன்று கேட்பதில்லை என்று எங்களால் கூற முடியாது. நபிமார்களின் வடிவில் தோன்றிய கலீஃபாக்களை உருவாக்கும் இந்த பண்பு முன்பு அவனிடம் இருந்தது. ஆனால், இப்போது அவனது இந்த ஆற்றலும், பண்பும் முடிந்துவிட்டது என்று எங்களால் கூறமுடியாது. இன்றும் கூட அவன், தான் யாரை விரும்புகின்றானோ அவரை தன்னுடன் பேசக்கூடியவராக அவனால் ஆக்கமுடியும். இந்த காலத்தில் அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை காத்தமுல் குலஃபாவாக ஆக்கி தனது இந்தப் பண்பை தெளிவாகவும், ஒளிமயமாகவும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். எந்த இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளானோ அவன் அவரிடம் செய்த வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றுவான். அவர்களை ஏற்றுக்கொண்டவர்கள் துன்பத்திற்கான நிலையில் செய்யும் துஆக்களை கேட்பான்; நிச்சயமாக கேட்பான்; கேட்கின்றான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனுடைய (27:63) வசனத்தில் வரும் ‘முழ்தர்’ என்ற சொல் சுட்டிக்காட்டுகின்ற துன்பத்திற்காளானவர்கள் என்பதன் கருத்து சோதனைக்குள்ளாகியிருக்கின்ற, துன்பத்திற்காளான நபர்களையே குறிக்கும்; இறைதண்டனைக்கு ஆளானவர்களை குறிக்காது.”

***(தாஃபிவுல் பலா. ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 231)***

அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சிகளையும் துஆ ஏற்றுக்கொள்ளப்படுகின்ற காட்சிகளையும் பார்த்த நிலையில் நாங்கள் அல்லாஹ்வினால் சோதிக்கப்படுகிறோம். ஆனால், இவ்வாறு சோதிக்கப்படுவது தண்டனையல்ல. மாறாக, ஈமானுக்கு வலுவூட்டுவதற்காகவே இறைவன் நம்பிக்கை கொண்டவர்களை சோதிக்கின்றான் என்பதில் நாங்கள் அகப்பார்வையுடன் உறுதியாக நிலை நிற்கின்றோம்.

எப்போதெல்லாம் இறைநியதிக்கு ஏற்ப ஜமாஅத்தின் மீது சோதனைகள் வந்தனவோ அப்போதெல்லாம் அல்லாஹ் ஜமாஅத்திற்கு அதன் பாதங்கள் உறுதியாக நிலைநிற்கும் தன்மையை வழங்கியுள்ளான் என்பதற்கும் துஆக்களின் பக்கம் அதன் கவனத்தை ஈர்த்துள்ளான் என்பதற்கும் ஜமாஅத்தின் மன்றாடல்களையும், நிம்மதியிழந்த நிலையில் செய்யப்படும் துஆக்களையும் ஏற்றுக்கொண்டவாறு வெற்றிகளின் பக்கம் அதை முன்னேறச் செய்து, பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக என்ற (2:156) வசனத்திலுள்ள நற்செய்திக்கு தகுதியுடையவர்களாக ஆக்கியுள்ளான் என்பதற்கும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 121 வருட கால வரலாறு சான்று பகர்கின்றது.

எனவே, இன்றும் பாகிஸ்தானில் ஜமாஅத்தின் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகள் தொடர்கின்றன. அக்கொடுமைகளுக்கு அளவேயில்லாத நிலையில் மிக கொடூரமாக லாஹூரிலுள்ள அஹ்மதிகள் மீது ஒட்டுமொத்தமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதுவும் இறை இல்லத்தில் இறைவனை வணங்கிக்கொண்டிருந்த நிராயுதபாணியாக இருந்த அஹ்மதிகள் மீது நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடந்த சமயத்தில் அஹ்மதிகள் எந்த அளவு பொறுமையுடனும் தைரியத்துடனும் நிம்மதியிழந்த நிலையில் துஆக்கள் செய்து கொண்டிருந்தார்களோ அவ்வாறே அந்த சம்பவத்திற்கு பிறகும்கூட இன்றுவரை அஹ்மதிகளிடம் அந்த நிம்மதியிழந்த சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள் துஆக்களில் ஈடுபட்டுள்ளனர்.

பிறகு இறைவன் இந்த துஆக்களை கேட்காமல் விட்டு விடுவானா என்ன? கேட்பான். நிச்சயமாக கேட்பாடன். - இன்ஷா அல்லாஹ். இது அவனது வாக்குறுதியாகும். இறைவனது பெயரால் இறைவனது நல்லடியார்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளையும், இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும் பார்க்கின்ற இறைவனுடைய





தன்மான உணர்வு வெளிப்படாமல் இருக்குமா? வெளிப்படும்; நிச்சயமாக வெளிப்படும்.

அஹ்மதிகள் மீது ஏன் கொடுமை இழைக்கப்படுகின்றது? நீங்கள் “லா இலாஹா இல்லல்லாஹூ முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்” என்பதன் உண்மையான பொருளை விட்டுவிட்டு அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயருக்கும், இழிவையும், அவமரியாதையையும் தருகின்ற பொருளை பின்பற்றுமாறு அவர்கள் அஹ்மதிகளிடம் கூறுகின்றார்கள்.

அஹ்மதிகள் தங்கள் கழுத்துகள் வெட்டப்படுவதை பொருட்படுத்தமாட்டார்கள். ஆனால், அல்லாஹ்வுக்கும், அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களின் பெயருக்கும் ஏற்படும் இழிவையும், அவமரியாதையையும் அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. ஒருபோதும் இறைவனின் பண்புகளை அவர்கள் ஒரு எல்லைக்குட்படுத்த முடியாது. ஒருபோதும் தூதர்களின் சிறந்தவர்களாகவும் காத்தமுன்னபிய்யீனாகவும் இருக்கின்ற ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர்தகுதிக்கு களங்கம் ஏற்பட அவர்கள் விடமாட்டார்கள்.

லா இலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள், நமது இறைவன் தொன்றுதொட்டே உண்மையான வணக்கத்திற்குரியவனாக இருக்கின்றான்; மேலும் எப்போதும் இருப்பான் என்பதாகும். எங்களது உண்மையான வணக்கத்திற்குரியவனின் எல்லா பண்புகளும் முன்னர் வெளிப்பட்டது போன்றே இன்றும் வெளிப்படமுடியும்; மேலும் அவை வெளிப்படுகின்றன என்று நாங்கள் கூறுகின்றோம். எவ்வாறு இதற்கு முன்பு அவன் சீர்குலைந்து போன சமுதாயங்களை சீர்திருத்துவதற்காக தனது வஹி மற்றும் இல்ஹாமை அருளியவாறு தனது சிறப்பான அடியார்களை அனுப்பி வைத்தானோ அவ்வாறே இக்காலத்திலும் அவன் அனுப்பியுள்ளான். ஆனால் தனது நடைமுறைக்கேற்ப சில சமயங்களில் ஷரீஅத்துடைய நபியையும் சில சமயங்களில் ஷரீஅத் இல்லாத நபியையும் அவன் அனுப்பிக்கொண்டி ருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி திருக்குர்ஆன் இறங்கிய பிறகு அவன் ஷரீஅத்தை முழுமைப்படுத்திவிட்டான். மேலும் கியாமத் வரை ஒவ்வொரு காலத்திலுமுள்ள மனிதனின் தேவைகளை நிறைவு செய்வதற்காக அவன் முழுமையான சிறந்த போதனைகளை இறக்கித் தந்தான். ஆனால் அந்த முழுமைபெற்ற போதனைகளை புரிந்து கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை

உண்மையாக பின்பற்றுபவர்களிடம் இன்றும்கூட அல்லாஹ் உரையாடுகின்றான். அத்தகையை நபரை அவன் நபித்துவத்தின் உயர்ந்த தகுதி வரை கொண்டு செல்ல முடியும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அந்த உயர்ந்த தகுதியை அவன் வழங்கியுள்ளான். காலம் செல்லச்செல்ல ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட அந்த போதனைகளை உலகம் மறந்துவிட்டபோது அப்போதனைகளை மீண்டும் உலகில் ஒளிபெறசெய்வதற்காகவே இந்த உயர்வான தகுதியை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அவன் வழங்கினான். லா இலாஹ இல்லல்லாஹ் என்பது வெறும் நாவளவிலான ஒரு அறிவிப்பு அல்ல. மாறாக, நமது வணக்கத்துற்குரியவனான அந்த அல்லாஹ் இதற்கு முன்னர் எப்போதும் இருந்தது போன்றே இன்றும் அந்த நற்பண்புகளின் தொகுப்பாக விளங்குகின்றான். அவன் இன்றும் கூட மார்க்கத்திற்காக வேதனைப்படுபவர்கள், அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிலைபெறச் செய்ய விரும்புபவர்கள் ஆகியோரது துஆக்களை கேட்டவாறு உண்மையான வணக்கத்திற்குரியவனையும் ஓரிறைவனையும், உலகத்திற்கு அடையாளம் காட்டும் நபர்களை அனுப்ப முடியும்; அனுப்பியுள்ளான் என்பதை இதன் மூலம் நாம் உலகத்திற்கு எடுத்துக்கூற முடியும். நாம் நாவால் லா இலாஹா இல்லல்லாஹ் என்று கூறிவிட்டு அவனை வணங்குவதன் மூலம் அல்லாஹ்வுடைய மார்க்கத்தின் உயர்வுக்காக நாம் செய்யும் துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்க முடியுமா? ஏக இறைவனின் ஆட்சி உலகில் நிலைபெற செய்வதற்காக நாம் செய்யும் துஆக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கமுடியும்? இறைவா! உனது இறுதியான, முழுமை பெற்ற மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்களின் நிலைமையும் சீர்குலைந்துவிட்டது. இவர்களை மீண்டும் உண்மையான வணக்கத்திற்குரியவனின் பாதங்களின் முன்னால் குனிய வைத்து ரஹ்மானின் அடியார்களாக ஆக்குவதற்கு ஏதாவதொரு மஸீஹை அனுப்பிவை என நாம் உரத்த குரலில் வேண்டும்போது, சந்தேகமில்லாமல் உண்மையான வணக்கத்திற்குரியவன் நான்தான். ஆனால், உங்களது இந்த துஆக்களை என்னால் கேட்கமுடியாது என்று எப்படி அந்த இறைவனால் கூற முடியும்? நவூதுபில்லாஹ். இன்றும்கூட அஹ்மதியல்லாத முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கப்பலை காப்பாற்றுவதற்கு கிலாஃபத்தின் அமைப்பு இருக்க வேண்டியது அவசியமானதாகும் என்று கூச்சலிட்டுக் கூறுகின்றார்கள். ஆனால் எந்த





காத்தமுல் குலஃபாவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரன்பிலும், நேசத்திலும் மூழ்கியவாறு அல்லாஹ் அனுப்பியுள்ளானோ அவர்களைப் பற்றி, இல்லை; இப்படிப் பட்டவரை அல்லாஹ்வால் அனுப்ப முடியாது என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

அல்லாஹ்வை தவிர வேறு வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை என்று கூறியவாறு நாம் அவனை வணங்கி அவன் முன்னால் குனிந்தபோது லா இலாஹ இல்லல்லாஹ் என்பதை நிலைநிறுத்துவதற்காக இந்த காலத்தில் நான் உங்களது மன்றாடல்களை கேட்டு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அனுப்பிவிட்டேன். செல்லுங்கள். அவரது உதவியாளராக இருந்து 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதை உலகில் பரப்புங்கள். எல்லாவிதமான இணைவைத்தலையும் உலகிலிருந்து அழிப்பதற்காக அவருக்கு உதவி செய்யுங்கள் என்று அந்த இறைவன் எங்களிடம் கூறினான். 'லா இலாஹ இல்லல்லாஹ்' தொடர்பாக நாங்கள் புரிந்துள்ள கருத்து இதுதான். ஆனால், நமது எதிரிகளால் இதனை சகித்துக்கொள்ள முடியவில்லை.

நீங்கள் எங்களை, போன்று நாவால் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுங்கள். அல்லாஹ்வை தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று நாவால் வேண்டுமானால் கூறிக் கொள்ளுங்கள். ஆனால், இன்றும் நம்முடைய துஆக்களை கேட்டவாறு எந்த ஒரு சீர்திருத்தவாதியையும், மஸீஹையும், நபியையும் அந்த இறைவன் உலகிற்கு அனுப்ப முடியும் என்று நீங்கள் கூறாதீர்கள் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

அஹ்மதிய்யத்தின் எதிரிகளே! கவனமாக கேளுங்கள்! அப்படிப்பட்ட எல்லைக்குட்பட்ட ஆற்றல்களையுடைய இறைவன் உங்களது வணக்கத்திற்குரியவனாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், எங்கள் இறைவன் அப்படிப்பட்ட வனல்லன். எங்களது உண்மையான வணக்கத்திற்குரிய அந்த ஏக இறைவனோ எல்லா நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டவனாகவும், எல்லா ஆற்றல்களுக்கும், எஜமானனாகவும் இருக்கிறான். அப்படிப்பட்ட இறைவனை நாங்கள் ஒருபோதும் கைவிடமுடியாது. எங்களது கழுத்துக்கள் வெட்டப்பட்டாலும் அப்படிப்பட்ட இறைவனை ஒருபோதும் எங்களால் விட்டுவிடமுடியாது; ஒருபோதும் எங்களால் விட்டுவிட முடியாது.

பிறகு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான தூதர் ஆவார்கள் என்பதை நாங்கள் மறுக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அவர்கள் இறைவனின் எத்தகைய தூதர் ஆக இருக்கின்றார்கள் என்றால் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும், அவன் உண்மையான வணக்கத்திற்குரியவன் என்பதையும் ஏற்றுக்கொள்வதுடன் அன்னாரின் தூதுத்துவத்தையும் ஏற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

அவ்வாறு ஏற்றுக் கொள்ளாமல் இனி கியாமத் நாள்வரை இறைவனது நெருக்கத்தை பெறுவது சாத்தியமற்றதாகும். இதை ஏற்றுக்கொள்ளாமல் இனி கியாமத் வரை துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில் உயர்வான தகுதியை பெறுவதும் சாத்தியமற்றதாகும். அல்லாஹ் அவனது அன்பிற்குரியவர்களின் துஆக்களையே அதிகமாக ஏற்றுக்கொள்கிறான். நமது துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு திருக்குர்ஆனில் ஒரு மருந்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் அறிவித்து அதனை நமக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். அந்த மருந்து இதுதான். அல்லாஹ் கூறுகின்றான்: ‘நீர் கூறுவீராக. மக்களே! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான்.’ (3:32)

எனவே, நாம் அல்லாஹ்வை நேசிப்பதாக வாதிக்கின்ற போது ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர்தகுதியை புரியாமலும் அவர்களை முழுமையாக பின்பற்றுவதற்கு நம்மை தயார் செய்து கொள்ளாமலும் இருக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இக்காலத்தின் மஸீஹாகவும், இமாமாகவும் இருக்கின்ற உயர்தகுதி கிடைத்துள்ளதென்றால் இந்தத் தகுதி அவர்களுக்கு தனது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை முழுமையாக நேசித்து அவர்களை முழுமையாக பின்பற்றியதன் விளைவாகவே கிடைத்தது. இந்த உயர் தகுதி அவர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் கண்ட ஒரு ஆன்மீக காட்சியில் மலக்குகள் அன்னாரை சுட்டிக்காட்டியவாறு ஹாதா ரஜுலுன் யுஹிப்பு ரஸூலல்லாஹ் அதாவது இந்த நபர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நேசம் வைத்துள்ளார் என்று கூறுவதை கண்டார்கள. (தஸ்கிரா பக்கம் 34 4வது பதிப்பு ஜியாவுல் இஸ்லாம் அலுவலகம், ரப்வாவில் அச்சடிக்கப்பட்டது).





ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது பற்றி விளக்கி கூறியுள்ளார்கள். அதாவது இந்த உயர்தகுதியை பெறுவதற்கான மிகப்பெரும் நிபந்தனை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நேசம் வைப்பதாகும். மேலும் இந்த நேசம் எல்லாரையும் விட அதிகமாக இந்த நபரிடம் காணப்படுகிறது என்று மலக்குகள் அறிவிப்பு செய்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சரியாகவும், உண்மையாகவும் புரிந்ததன் காரணமாகவே இந்த உயர்வான தகுதி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைத்தது. அதன் மூலம் நமக்கும் அதன் அருள்கள் கிடைத்துள்ளன. இதைப்பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“எனது எவ்வித திறமையினாலும் அல்லாமல் இறைவனது அருளாலேயே எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்கும் வழங்கப்பட்ட அருட்கொடையிலிருந்து முழுமையான பங்கு எனக்கு கிடைத்துள்ளது. நான் எனது தலைவரும், எஜமானரும் நபிமார்களுக்கு பெருமை சேர்ப்பவரும், படைப்பினங்களில் சிறந்தவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழிகளை பின்பற்றாமல் இருந்திருந்தால் இந்த அருட்கொடையை நான் பெறுவது சாத்தியமற்றதாகும். ***(ஹகீகதுல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 64)***

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“எனக்கு கிடைத்தவையெல்லாம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றியதனால்தான் கிடைத்தது. எந்த ஒரு மனிதனும் அந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பின்பற்றாமல் இறைவன் வரை சென்றடைய முடியாது. மேலும் முழுமையான இறை ஞானத்தின் பங்கை பெற முடியாது என்பதை நான் எனது உண்மையான முழுமையான அறிவின் மூலமாக நான் அறிகிறேன்.” ***(ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக். 65,66)***

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றுவதன் மூலமாகவும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பையும், நேசத்தையும் உண்மையாக வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலமாகவும், தங்கள் செயலை

அதற்கேற்ப அமைத்துக்கொள்வதன் மூலமாகவும், அல்லாஹ் தனது அடியார்களை தனது அருட்கொடையை வழங்கியவர்களுடன் இணைத்து விடுகின்றான் என்ற அறிவை அல்லாஹ்விடமிருந்து மஹ்தி மஸீஹாக அனுப்பப்பட்ட இக்காலத்தின் இமாம் மூலம் நாங்கள் பெற்றோம். இவர்களை பற்றியே அல்லாஹ், 'அன்அமல்லாஹு அலைஹிம்' அல்லாஹ் அருள் புரிந்தவர்கள் (4:70) என்று கூறுகின்றான். அல்லாஹ்வின் இந்த அருள் காரணமாக 'மினன் நபிய்யீன வஸ்ஸித்தீகின வஷ்ஷுஹதாயி வஸ்ஸாலிஹீன்' அதாவது அம்மக்கள் நபிமார்கள், சித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் ஆகிய உயர் பதவியைப் பெறுபவர்களாக ஆகிவிடுவார்கள் (4:70)

எனவே, ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சரியாகப் புரிந்துகொண்டவர்களையும், அவர்கள் மீது அன்பு வைத்திருப்பவர்களையும், இறைவனுக்கு மிக நெருங்கிய அடியார்களுக்கு கிடைக்கக்கூடிய அந்த உயர்வான தகுதிகள் மற்றும் பதவிகள் வரை இறைவனால் கொண்டு செல்ல முடியும்; கொண்டு செல்கிறான். இறைவன் அந்த உயர்ந்த பதவிகளை அவர்களுக்கு வழங்குகின்றான் என்பதுதான் எங்களது ஈமானாகும்.

எதிரிகள் நம்மிடம் கூறுகிறார்கள்:

திருக்குர்ஆனின் இந்த போதனைக்கு நேர் எதிராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வார்தகுதி பற்றி புகழ்ந்து கூறுங்கள். அவ்வாறு கூறவில்லையென்றால் நாங்கள் உங்கள் கழுத்துக்களை வெட்டுவோம். "லா இலாஹ இல்லல்லாஹ்" என்பதற்கு நாங்கள் கூறும் விளக்கத்திற்கு ஏற்ப நீங்கள் செயல்படத் தயாராக இருந்தால் நல்லது. அவ்வாறில்லை யென்றால் மரணிப்பதற்கு தயாராகுங்கள். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக நாங்கள் என்ன கூறுகின்றோமோ அதற்கேற்ப அவர்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால் நல்லது. அல்லது உங்கள் உயிரை இழப்பதற்கு தயாராகி விடுங்கள் என்று எதிரிகள் நம்மிடம் கூறுகின்றார்கள்.

நாங்கள் எங்கள் எதிரிகளிடம் கூறுகின்றோம். 'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மத்துர் ரஸூலுல்லாஹ்' என்ற கலிமாவுடன் உண்மையான நம்பிக்கையும் பற்றும் வைத்திருப்பவர்கள் நாங்களா அல்லது நீங்களா என்பதைப் பற்றி கியாமத் நாளன்று எங்களுக்கும், உங்களுக்கும் இடையில் தீர்ப்பு கூற இருக்கின்ற அந்த கலிமாவின் மீது ஆணையாக! இந்த உலகில் உங்களது தற்காலிக ஆற்றல்கள் மீது





நம்பிக்கை வைத்து அரசாங்கங்களின் ஆதரவு உங்களுக்கு இருக்கின்றது என்ற எண்ணத்தில் நீங்கள் எத்தகு கொடுமைகளையும், அநீதிகளையும் எங்கள் மீது செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள். ஆனால், எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை எங்கள் கண்முன் நிறுத்தியவாறு நாங்கள் இந்த அறிவிப்பை செய்கின்றோம்.

இந்த கலிமாவை பற்றிய இந்த உண்மையான அறிவும், ஞானமும்தான் இனி வரும் நிலையான வாழ்க்கையில் சொர்க்கத்தின் நற்செய்திகளை வழங்கும். இறைவனிடமிருந்து நேர்வழிகாட்டலைப் பெற்று இந்த கலிமாவின் மூலமாகத்தான் கதமுன்னுபுவ்வத் பற்றிய உண்மையான அறிவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எங்களுக்கு வழங்கியுள்ளார்கள். எனவே, இவ்வுலகிலும் லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மத்தர் ரஸூலுல்லாஹ் என்பது எங்களது உள்ளத்தின் ஓசையாக இருக்கும். மறுமையிலும் இது எங்களுக்கு சாட்சியாக இருந்து எதிரிகளின் குரல்வளையை பிடிக்கும். - இன்ஷா அல்லாஹ்.

முஹம்மதிய மஸீஹின் வருகையினாலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காத்தமுன்னபிய்யீன் என்ற உயர்தகுதி மேலும் அதிகரிக்கிறது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தை சார்ந்த ஒருவருக்கு இந்த உயர்வான தகுதி கிடைப்பது அன்னாரின் உயர்வான மகிமையை வெளிப்படுத்திக் காட்டுவதாகும் என நாம் உரத்த குரலில் அறிவிப்பு செய்கின்றோம். இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மகிமையும், உயர்வான தகுதியும் நமது எண்ணங்களுக்கும், யூகங்களுக்கும் அப்பாற்பட்டதாகும். அவரது அடிமையை பாருங்கள்! அவரோ காலத்தின் மஸீஹாக இருக்கின்றார். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 286. அடிக்குறிப்பு)

எனவே, நாங்கள் இந்த போதனைகளை எங்கள் நெஞ்சங்களோடு அணைத்தவாறு ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா, அஹ்மது முஜ்தபா (ஸல்) அவர்களின் உயர்வான மகிமையை நிலைநிறுத்துபவர்களாக இருக்கின்றோம். அந்த ஒரு மவ்லவியின் அல்லது ஆலிமின் அல்லது அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்கு பயந்தோ, பொருள், உயிர் இழப்புகள் ஏற்படும் என்ற மிரட்டல்களுக்கு அஞ்சியோ, இவர்கள் கொல்லப்பட

வேண்டும் என்ற மார்க்கத் தீர்ப்புகளைக் கேட்டு கவலையடைந்தோ, கொடுமையான முறையில் நடைபெற்ற கிரேனடுகளின் தாக்குதல்களுக்கும் சரமாரியாக துப்பாக்கி குண்டுகளுக்கும் இலக்காகி எங்களுக்கு பிரியமானவர்கள் ஷஹாதத்தின் தகுதியைப் பெற்றுவிட்டதை பார்த்ததனாலோ இந்த முஹம்மதிய மகிமையை நிலைநாட்டுவதிலிருந்தும் நாங்கள் ஒருபோதும் விலகி பின்நோக்கி செல்பவர்களாக இருக்க மாட்டோம்.

எதிரிகள் புதிதாக கொடிய அநீதியான செயல்களை தொடர்ந்து செய்து வருவதிலிருந்தும் விலகிவிடமாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஷய்த்தானின் அடியாட்களின் வேலையே இதுதான். அமைதி மற்றும் நிம்மதியின் தூதுவராகவும், மனிதர்களுக்கு நன்மைகளை செய்பவராகவும் விளங்கிய நமது அன்பான ரஸூல் (ஸல்) அவர்களது பெயரை பயன்படுத்தியவாறு இந்த கொடிய செயல்களை செய்வதுதான் நமக்கு வேதனையாக இருக்கின்றது. எந்த ரஸூல் (ஸல்) அவர்கள், பலவீனமானவர்கள், விதவைகள், அநாதைகள் ஆகியோரின் பாதுகாவலராக வந்தார்களோ அந்த ரஸூல் (ஸல்) அவர்களின் பெயரால் இந்த கொடுமைக்காரர்கள் பலவீனமானவர்களின் பாதுகாவலராக இருந்தவர்களை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டிருக் கின்றனர். திருமணமான பெண்களை விதவைகளாகவும், குழந்தைகளை அநாதைகளாகவும் ஆக்குவதற்கான கொடுமையான முயற்சிகளை இவர்கள் செய்து வருகின்றனர். பிறகு இந்த செயலில் மகிழ்ச்சியடைந்து இனிப்புகளை வழங்கி வருகின்றனர்.

எந்த தூதர் (ஸல்) அவர்கள் மனிதத்தன்மையின் உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்காக வந்தார்களோ, எவர் அறிவிலிகளாகவும், காட்டுமிராண்டிகளாகவும் இருந்த மனிதர்களை இறைநெருக்கம் பெற்ற மனிதர்களாக மாற்றினார்களோ அந்த தூதர் (ஸல்) அவர்களின் பெயரால் இந்த கொடுமைக்காரர்கள் மனிதத்தன்மையின் சாதாரண உரிமைகளை கூட அழித்து கொண்டேயிருக்கின்றார்கள்.

கொடுமை இழைப்பவர்களே! இறைவனுக்காக எனது அன்பிற்குரிய ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தாதீர்கள். நீங்கள் உங்களது தீய செயல்களிலிருந்து விலக முடியவில்லையென்றால் விலகாமல் இருந்து கொள்ளுங்கள். அநீதி இழைப்பதிலிருந்தும் கொடூரமான செயல்களை செய்கின்ற முன்னுதாரணங்களை





நிலைநாட்டுவதிலிருந்தும் உங்களை தடுத்துக் கொள்ள முடியவில்லை என்றால் தடுத்துக் கொள்ளாமல் இருங்கள். அஹ்மதிகள் மீது வெறித்தனமான தாக்குதல்கள் நடத்தவும், கொடுமை இழைக்கவும் விரும்புகின்றீர்கள் என்றால் தாராளமாக அவற்றைச் செய்யுங்கள் செய்து கொண்டேயிருங்கள். அரசாங்கத்தின் ஆசீர்வாதம் உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த பணிகளை செய்கின்றீர்கள் என்றால் தாராளமாக செய்து கொள்ளுங்கள். ஆனால், எனது அன்பிற்குரிய ரஸூல் (ஸல்) அவர்களின் பெயரால் இந்த இழிவான செயல்களை செய்யாதீர்கள்.

கவனமாகக் கேளுங்கள்; நீங்கள் தான் புனித கலிமாவான ‘லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ என்பதற்கு அவப்பெயரை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். அஹ்மதிகள் அல்ல. நீங்கள் உண்மையாளர்களாக உங்களை கருதுவதாக இருந்தால் அல்லாஹ் உங்களுக்காக அடையாளத்தை வெளிப்படுத்தி காட்ட வேண்டும் என இறைவன் முன்னிலையில் அழுது முறையீடு செய்யுங்கள். ஆனால், நினைவில் கொள்ளுங்கள். இந்த காலத்தில் இறைவனது தூதராகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரண்பராகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராக செய்யப்படும் துஆக்களும், மன்றாடல்களும் காற்றில் பறந்து போய்விடும்.

எனக்கு எதிராக செய்யப்படும் தீய துஆக்களை இறைவன் ஒரு போதும் கேட்கமாட்டான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லா எதிரிகளுக்கும் திறந்த சவாலை விடுத்துள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

“நான் அல்லாஹ்விற்காக அறிவுரை கூறியவாறு எதிரிகளான ஆலிம்களிடமும் அவர்களோடு ஒத்த கருத்துடைய பொதுமக்களிடமும் வேண்டிக்கொள்வது என்னவென்றால், ஏசிப் பேசுவதும், தீய சொற்களை பயன்படுத்துவதும் கண்ணியமான வழிமுறையல்ல. உங்களது இயல்பு இவ்வாறுதான் இருக்குமென்றால் உங்கள் விருப்பம் போல் நடந்துகொள்ளுங்கள். ஆனால், நீங்கள் என்னை பொய்யனாகக் கருதுவதாயிருந்தால் நீங்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ பள்ளிவாசல்களில் எனக்கு எதிராக தீய துஆக்களை செய்யுங்கள். அழுதழுது எனது அழிவிற்காக பிரார்த்தனை கேளுங்கள். பிறகு நான் பொய்யன் என்றால், பின்னர் கண்டிப்பாக அந்த துஆக்கள்

ஒப்புக்கொள்ளப்பட்டு விடும். மேலும் இத்தகைய துஆக்களையே நீங்கள் எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் நாவுகளில் காயம் படிந்துவிடும் அளவுக்கு நீங்கள் துஆக்களை செய்தாலும், உங்கள் மூக்குகள் தேய்ந்து போகும் அளவுக்கு சஜ்தாக்களில் வீழ்ந்து அழுதழுது வேண்டினாலும், அதிகமாக அழுததன் விளைவாக பார்வை குறைந்து போனாலும், கண்ணின் மணிகள் உதிர்ந்து போனாலும் இறுதியில் புத்தி பேதலித்துப்போய் வலிப்பு ஏற்பட்டாலும், அந்த துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால், நான் இறைவன் புறமிருந்து வந்தவன் ஆவேன். எவர் எனக்கு எதிராக தீய துஆ செய்வாரோ அந்த தீய துஆ அவர் மீதே விழும். எவர் என்னைப் பற்றி அவர்மீது சாபம் உண்டாகட்டும் என்று கூறுவாரோ அந்த சாபம் அவரது உள்ளத்தில் விழும். ஆனால், அது பற்றி அவருக்கு தெரியாது.”

***(அர்பயீன் எண்: 4, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 471, 472)***

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அந்த உண்மைதான் எனது ஆன்மாவில் இருக்கின்றது. எனக்கு இறைவனுடன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை ஒத்த ஒரு தொடர்பு இருக்கின்றது. எனது இறைவனை தவிர எவரும் எனது இரகசியங்களை அறிய மாட்டார். எதிரிகள் வீணாக தங்களை அழிவிற்கு ஆளாக்கிக் கொண்டிருக்கின்றனர். நான் அவர்களின் கைகளால் பிய்த்து எறியப்படும் செடியல்ல. அவர்களின் முன்னவர்களும், பின்னவர்களும், அவர்களில் உயிரோடு இருப்பவர்களும், மரணித்து போனவர்களும் ஆகிய அனைவரும் ஒன்று கூடி எனது அழிவிற்காக துஆக்களை செய்தாலும் என் இறைவன் அந்த எல்லா துஆக்களையும் சாபத்தின் வடிவில் மாற்றி அதனை அவர்கள் முகத்தில் எறிந்து விடுவான். பாருங்கள்! நூற்றுக்கணக்கான அறிவுள்ள மனிதர்கள் உங்களது ஜமாஅத்திலிருந்து வெளியேறி எங்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றார்கள். வானத்தில் ஒரு கூச்சல் எழுந்துள்ளது. வானவர்கள் தூய உள்ளங்களை இந்தப் பக்கம் இழுத்துக்கொண்டு வருகின்றனர். இப்போது விண்ணின் இந்த பணிகளை மனிதனால் தடை செய்ய முடியுமா? உங்களுக்கு சக்தி இருந்தால் இதை தடுத்து நிறுத்துங்கள். நபிமார்களின் எதிரிகள் செய்த





அந்த எல்லா சூழ்ச்சிகளையும், ஏமாற்று வேலைகளையும் செய்யுங்கள். எந்த ஒரு திட்டத்தையும் கைவிடாதீர்கள். முழுமையாக முயற்சி செய்து பாருங்கள். மரணம் வரை உங்களை கொண்டு செல்லும் அளவுக்கு அதிகமாக தீய துஆக்களை செய்யுங்கள். பிறகு என்ன சீர்குலைவை உங்களால் ஏற்படுத்த முடிந்தது என்று பாருங்கள். இறைவன் புறமிருந்து விண்ணின் அடையாளங்கள் மழைபோல் பொழிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், பாக்கியமற்ற மனிதன் தூரத்தில் இருந்து கொண்டு ஆட்சேபனைகளை செய்கின்றான். எந்த உள்ளங்களில் முத்திரை குத்தப்பட்டு விட்டதோ அவர்களுக்கு நாம் என்ன சிகிச்சை வழங்க முடியும்? இறைவா! நீ இந்த உம்மத்தின் மீது கருணை காட்டுவாயாக!

***(அர்பயீன் எண் 4, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 473)***

அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் இந்த தீய செயல் அவர்களால் துஆக்கள் மூலமாகவும், ஆதாரங்கள் மூலமாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்த்து நிற்க முடியாது என்பதை நிரூபிக்கின்றது.

நபிமார்களின் எதிரிகளின் நடைமுறையை பின்பற்றியவாறு உங்களுடைய சக்தியை பயன்படுத்தி அரசாங்கத்தின் துணையுடன் எங்களை எதிர்த்து நில்லுங்கள். எந்த சக்தியையும், அரசாங்கத்தையும் நீங்கள் நம்பியுள்ளீர்களோ அவற்றை பயன்படுத்தி எதிர்த்து நில்லுங்கள். கடந்த 121 வருடங்களாக இதைத்தான் நீங்கள் செய்து வருகின்றீர்கள்.

இந்த எதிர்ப்புகளால் அஹ்மதிய்யத்தின் பாதங்கள் தடுத்து நிறுத்தப்பட்டதா என்ன? அஹ்மதிய்யத் எல்லா பக்கமும் ஒவ்வொரு திசையிலும் பரவிக்கொண்டே செல்கிறது. ஒவ்வொரு எதிர்ப்பிற்குப் பிறகும் தூய இயல்புள்ள மக்கள் அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றார்கள். தற்போது நடைபெற்ற இந்த கொடூர செயலுக்கு பிறகும்கூட பல தூய இயல்புள்ள மக்கள் அஹ்மதிய்யத்தின் அதாவது உண்மை இஸ்லாத்தின் மடியில் வந்து அமர்ந்துவிட்டார்கள். லாஹூர் சம்பவத்திற்கு பிறகு அந்தச் சம்பவத்தைப் பார்த்தும் அதை பற்றி கேட்ட பிறகும் பல பைஅத்துகள் நடைபெற்றுள்ளன. இந்த சம்பவத்திற்கு பிறகு குழப்பத்தை ஏற்படுத்துகின்ற இந்த கும்பல் நம்மை எதிர்ப்பதிலும், கீழ்த்தரமான சொற்களை பயன்படுத்துவதிலும் மேலும் முன்னேறியுள்ளதுதான். அவ்வாறிருந்தும் மக்களுக்கு நமது பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் எவ்வித தடையுமின்றி இவர்களது கொடூரமான செயல்கள் காட்டப்படுகின்றன.

ஏதாவது ஒரு டி.வி. சேனல் சம்பவங்களின் ஒளியில் உண்மைகளை எடுத்து கூறுவதற்கும், அஹ்மதிய்யா ஜமாஅத் செய்துள்ள சேவைகள் தொடர்பாக விளக்குவதற்கும், அஹ்மதிகளுக்கு அழைப்பு விடுத்தால், முல்லாக்களின் அச்சத்தாலோ அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு பயந்தோ இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான அனுமதி அவர்களுக்கு கிடைக்கவில்லை அல்லது பிறகு தாமாகவே அவர்கள் எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கூறி விடுகின்றார்கள். இவ்வாறு நடப்பதற்கு காரணம், சமுதாயத்தின் கண்கள் மீது இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் எத்தகைய தவறான பிரச்சாரம் என்ற திரையை போட்டுள்ளார்களோ அது, அஹ்மதிகளின் உண்மை நிலை மக்களின் முன்னால் எடுத்து வைக்கப்படும்போது கிழிந்துவிடும் என்பதேயாகும். மேலும் இதனால் எவர்களுக்கு அஹ்மதிகளை ஏசுவதன் மூலமாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக கீழ்த்தரமான சொற்களை பயன்படுத்துவதன் மூலமாகவும் உணவு கிடைத்துக்கொண்டிருக்கின்றதோ அந்த உணவு நின்றுவிடும் என்பதும் இதற்கான காரணமாகும்.

எனவே, சுயநலவாதிகளாக இருக்கும் இந்த முல்லாக்கள் துரதிர்ஷ்டவசமாக பாகிஸ்தானிய அரசாங்கங்களின் அதிகாரத்தில் தலையிடுபவர்களாக இருக்கின்றார்கள். அரசாங்கங்களும் கூட தங்களது வணக்கத்திற்குரியவர்களாக இந்த முல்லாக்களை கருதியவாறு தங்களது கண்களையும் காதுகளையும் மூடிக் கொள்கின்றது.

தங்களுக்கு பெரும்பான்மையான மக்களின் ஆதரவு இருக்கின்றது; அதிகாரமும் இருக்கின்றது என்ற மமதையில் கொடுமை இழைப்பதில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்ற மக்களே! 'அவர்கள் உணர்ந்து கொள்ளாத விதத்தில் படிப்படியாக நாம் அவர்களை அழிவின் பக்கம் இழுத்துக்கொண்டு வருவோம்' (7:183) என்று கூறுகின்ற அந்த இறைவனுக்கு அஞ்சுங்கள். உங்களது அழிவை குரல் கொடுத்து அழைக்காதீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராகவும், இக்காலத்தின் அழைப்பாளராகவும் இருக்கின்றவரின் குரலை காது கொடுத்துக் கேளுங்கள். அவரும் அல்லாஹ்வின் அடையாளமாக திகழ்கின்றார். உங்களது எதிர்ப்பு உங்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது என்று நீங்கள் கருதாதீர்கள். அல்லாஹ்வின் புறமிருந்து உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவை உங்களது வெற்றிக்கான





அறிகுறியாக நீங்கள் கருத வேண்டாம். இந்த காலக்கெடு "நான் அவர்களுக்கு காலக்கெடு அளித்திருக்கின்றேன்" (7 : 84) என்ற இறைவனின் கூற்றுக்கேற்பவே உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. ஆனால், இதற்கு பிறகுள்ள எச்சரிக்கை வடிவிலான சொற்களையும் சற்று சிந்தனை செய்து பாருங்கள். அதில் அல்லாஹ், 'என் திட்டம் நிச்சயமாக மிக்க உறுதி வாய்ந்தது' என்று கூறுகின்றான். (7:184)

அல்லாஹ் வரம்பு மீறி செயல்படுபவர்களுக்கு எதிராக திட்டம் தீட்டுகின்ற போது அது மனிதனின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. அது என்ன திட்டம் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுகின்றான்; நிறைவேற்றுவான் என்ற உறுதி எங்களுக்கு இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"எவர் இறைவனால் அனுப்பப்பட்டவரை எதிர்க்கின்றாரோ அவர் அவரையல்ல. மாறாக, உண்மையில் அவர் இறைவனை எதிர்க்கின்றார். நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ் தண்டனை வழங்குவதில் மெதுவாக செயல்பட்டாலும் எவர்கள் தங்களது தீய செயல்களிலிருந்து விலகுவதில்லையோ, மேலும் தங்களது பாவங்களை ஏற்றுக்கொண்டு இறைவனுக்கு முன்னால் குனிவதற்குப் பகரமாக இறைவனது தூதருக்கு தொல்லை கொடுக்கின்றார்களோ, துன்பத்தைக் கொடுக்கின்றார்களா, அப்படிப்பட்டவர்கள் இறுதியில் பிடிக்கப்படுகின்றார்கள்; கண்டிப்பாகப் பிடிக்கப்படுகின்றார்கள்."
***(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 412, 413. ரப்வாவில் வெளியிடப்பட்ட புதிய பதிப்பு)***

எனவே, அஹ்மதிகளே! நீங்கள் இந்த கொடுமைகளால் கவலையடைந்து விடாதீர்கள். இறைவனின் ஜமாஅத்துகளுடன் எப்போதும் இத்தகு பறிமாற்றம்தான் இருந்துள்ளது. இந்த கொடுமை இழைப்பவர்களின் விவகாரத்தை இறைவனிடம் விட்டுவிடுங்கள்.

நான் கூறியிருப்பது போன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் இப்படிப்பட்ட சம்பவங்களால் இதற்கு முன்பும் நின்றுவிடவில்லை. வருங்காலத்திலும் நின்றவிடாது - இன்ஷா அல்லாஹ். அநியாயக்காரர்களை அல்லாஹ் பிடிப்பான்; கண்டிப்பாக பிடிப்பான். நமது பணி இறைவன் முன்னால் குனிந்தவாறு அவனது கருணையை ஈர்ப்பதேயாகும்.

எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள் என்று (கூறி ) நம்பிக்கையின் பால் அழைக்கும் ஓர் அழைப்பவரின் குரலை நிச்சயமாக நாங்கள் செவியுற்றோம் (3:194) என்று நாம் அறிவிப்பு செய்துள்ளோம். அந்த அழைப்பவர் நம்மிடம் அல்லாஹ்வை தவிர உங்களது வணக்கத்திற்குரியவர் வேறு யாரும் இல்லை என்ற விஷயத்தின் மீது ஈமான் கொள்ளுங்கள். பூமியையும், வானத்தையும் பரிபாலிக்கின்ற அந்த இறைவன் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்றான் என்பதில் ஈமான் கொள்ளுங்கள். வானத்தை படைத்தவனும் அதில் இருக்கின்ற ஒவ்வொரு பொருளைப் படைத்து அவற்றை வளர்த்து காப்பவன் அந்த இறைவன்தான் என்பதில் ஈமான் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூதர்களில் சிறந்தவராகவும், நபிமார்களின் முத்திரையாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் மீது இறங்கிய ஷரீஅத் முழுமையடைந்து விட்டது என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். திருக்குர்ஆன் அகிலங்களின் இறைவன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட இறுதியான மார்க்க சட்டத்தையுடைய வேத நூலாகும் என்பதில் ஈமான் கொள்ளுங்கள்.

மலக்குகள் உண்மையிலேயே இருக்கின்றார்கள். எவ்வாறு இதற்கு முன்னர் அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை முழுமையாக நிறைவேற்றி வந்தார்களோ அவ்வாறே இன்றும் அவற்றை நிறைவேற்றி வருகின்றார்கள். வஹி மற்றும் இல்ஹாமை இறக்குகின்ற மலக்குகள் எவ்வாறு இதற்கு முன்பு செயல்பட்டனரோ அவ்வாறே இப்போதும் செயல்படுகின்றனர். பரிசுத்த ஆவியின் உதவிகள் இதற்கு முன்னர் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதர்களுக்கு எவ்வாறு கிடைத்துக் கொண்டிருந்ததோ அவ்வாறே இன்றும் கிடைக்கின்றது என்பதில் ஈமான் கொள்ளுங்கள். இதற்கு முன்பு தோன்றிய நபிமார்கள் மீது அல்லாஹ்விடமிருந்து வேதங்கள் இறங்கின என்பதில் ஈமான் கொள்ளுங்கள். இதற்கு முன்புதோன்றிய நபிமார்கள் மீது அல்லாஹ்விடமிருந்து வேதங்கள் இறங்கின என்பதில் ஈமான் கொள்ளுங்கள் எல்லா தூதர்களும் அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றியவர்கள் சில நபிமார்கள் ஷரீஅத்தையுடைய நபிமார்களாக வந்தார்கள். வேதங்களைக் கொண்டு வந்தார்கள்.

சில நபிமார்கள் தங்களுக்கு முன்புள்ள நபிமார்களின் போதனையை மேலும் பரப்புவதற்காக வந்தார்கள் என்பதில் ஈமான் கொள்ளுங்கள். எல்லா தூதர்களும் இறைவன் புறமிருந்து தோன்றியவர்கள் ஆவார்கள்.





இவ்வகையில் எல்லா தூதர்களும் சமமானவர்களே என்பதில் ஈமான் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப பின்னவர்கள் மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றுகின்ற ஒரு நபி தோன்ற வேண்டியதிருந்தது. அல்லாஹ் தனது வாக்குறுதிக் ஏற்ப அவரை அனுப்பி விட்டான் என்பதில் ஈமான் கொள்ளுங்கள் என்று கூறினார். இவற்றை எல்லாம் கேட்ட பிறகு ஃபஆமன்னா (நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம்) என்று நாம் கூறுகின்றோம்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரே! மஸீஹே! மஹ்தியே! நாங்கள் உம்மைத்தான் அந்த அழைப்பாளராக கருதுகின்றோம். எவர் வருவதை பற்றி இறைவன் இக்காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தானோ அவர் நீர்தான் நாங்கள் முழுமையாக உமக்கு கட்டுப்பட்டு நடந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைக்கப்பட்ட அந்த முழுமையான ஷரீஅத்தை பின்பற்றி நடப்போம் என்று உடன்படிக்கை செய்கின்றோம். வாக்களிக்கப்பட்ட மஸீஹே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைக்கப்பட்ட அந்த முழுமையான ஷரீஅத்தை இந்த காலத்தில் உலகில் பரப்புகின்ற பணியை இறைவன் உம்மிடம் ஒப்படைத்துள்ளான். அல்லாஹ்வே! துஆக்களை கேட்பவனே! மன்னிக்கக் கூடியவனே! மீண்டும் கருணை காட்டுபவனே! நாங்கள் எங்கள் பாவங்களை ஏற்றுக் கொண்டவாறு உன்னிடம் துஆ கேட்கின்றோம். பைஅத் உடன்படிக்கை வடிவில் நாங்கள் உன்னால் அனுப்பப்பட்ட தூதரிடம் செய்த உடன்படிக்கை மீதுள்ள நம்பிக்கையில் எங்கள் இறுதி மூச்சு உள்ள வரை நிலைத்திருக்கச் செய்வாயாக என்று உன்னிடம் நாங்கள் துஆ செய்கின்றோம்.

‘எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக! எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக.’ (3:194)

நாம் நமது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டவாறு, தீமைகளிலிருந்து தவிர்ந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தால்தான் நாம் நமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவர்களாக ஆக முடியும். நாம் நமது செய்லகளை கண்காணித்து நமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற ஒவ்வொரு நொடியும் முயற்சி செய்து கொண்டிருந்தால்தான் நமது மரணமும் அந்த நல்லடியார்களுடன் ஏற்பட முடியும். எவர்கள் தங்கள்

பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றி இறைவனுடைய திருப்தியின் சான்றிதழைப் பெற்றுக் கொண்டனரோ அவர்கள் எத்தகைய நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றார்கள்!

நாம் ஷஹீதுகளின் சம்பவங்களைக் கேட்கின்றோம். தற்போது குத்பாக்களில் எந்த ஷஹீதுகளை பற்றி நீங்கள் கூறி வருகின்றீர்களோ அவர்களில் சிலரை பற்றி தனிப்பட்ட முறையில் எங்களுக்கு தெரியும் என்று எனக்கு சிலர் கடிதம் எழுதியுள்ளனர். நிச்சயமாக அவர்களில் ஒவ்வொருவரும் தங்களது வாக்குறுதியை நிறைவேற்றியவர்களாகவும் ஒளிமிக்க பிரகாசமான நட்சத்திரமாகவும் இருந்தனர் என்பதை இவர்கள் தங்களது சொந்த அனுபவத்தால் உணர்ந்திருக்கின்றனர்.

வான் நட்சத்திரம் அல்லது வேறு சில நட்சத்திரங்கள் பூமியின் வழிகளை அடையாளங்காட்டி நமக்கு வழிகாட்டுகின்றன. இந்த மக்களோ இறைவனது திப்தியை பெறுவதன் பக்கம் நமக்கு வழிகாட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். இறைவன் மீதுள்ள பேரன்பு மற்றும் நம்பிக்கைக்கு பாத்திரமாக செயல்படுதல் என்ற செழிப்பான வயல்களின் பக்கம் நம்மை இவர்கள் கொண்டு செல்லக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனவே, இந்த மக்கள் தங்கள் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவர் களாவார்கள்.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா செய்யது அப்துல் லதீஃப் சாஹிப் ஷஹீது (ரலி) அவர்களைப் பற்றிக் கூறிய பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“எனக்கு எனது ஜமாஅத் தொடர்பான நம்பிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. ஏனென்றால், எந்த இறைவன் இந்த ஜமாஅத்தை சார்ந்த சில நபர்களுக்கு தங்களது பொருளை மட்டுமின்றி உயிரையும் இவ்வழியில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பை தந்துள்ளானோ அந்த இறைவனின் தெளிவான நாட்டம், ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா அப்துல் லதீஃப் சாஹிபின் ஆன்மாவை கொண்டுள்ள அத்தகைய பல நபர்களை இந்த ஜமாஅத்தில் உருவாக்குவதுதான் என்பது தெரிகிறது. ***(தஸ்கிரதுஷ் ஷஹாததைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 75)***

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்களது ஆன்மீகக் காட்சியைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:





“நமது தோட்டத்திலிருந்த உயரமான, பசுமையான கிளையொன்று வெட்டப்பட்டது. மேலும் இந்த கிளை மீண்டும் வளர்ச்சியடைந்து பூக்களை தருவதற்கு அதனை மீண்டும் பூமியில் நடுங்கள் என்று நான் கூறுகின்றேன்”.

இந்த ஆன்மீக காட்சியை ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா செய்யது அப்துல் லதீஃப் ஷஹீது (ரலி) அவர்கள் ஷஹீதான சம்பவத்துடன் தொடர்பு படுத்தி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“இறைவன் பலரையும் ஹஸ்ரத் அப்துல் லதீஃப் ஸாஹிப் ஷஹீது (ரலி) அவர்களின் பிரதிநிதிகளாக உருவாக்குவான் என்று நான் இதற்கு (இந்த ஆன்மீக காட்சிக்கு) விளக்கம் கூறுகின்றேன். எனது இந்த ஆன்மீக காட்சியின் விளக்கம் ஏதாவதொரு சமயத்தில் வெளிப்படும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.” ***(தஸ்கிரதுஷ் ஷஹாதனதன் ரூஹானி கஸாயின். தொகுதி 20 பக்கம் 75-76)***

எனவே எவர்கள் பொருளையும், உயிர்களையும் தியாகம் செய்தவாறு தங்களது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்களோ, அவர்கள் இந்த ஆன்மீக காட்சிக்கு பொருந்தக் கூடியவர்களாகவும் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லதீஃப் சாஹிப் ஷஸிது (ரலி) அவர்களின் வடிவில் பூமியில் நடப்பட்ட அந்த கிளையின் விழுதுகளாகவும் இருக்கின்றார்கள். எவருக்கு ஷஹாதத்தின் பதவியை வழங்க வேண்டும் என்பதும், எவரிடம் வேறு ஏதாவதொரு வகையில் அவரது சேவையை பெற வேண்டும் என்பதும் இறைவனின் அறிவில் உள்ள விஷயமாகும். ஆனால், பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியவாறு தங்களிடம் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற்றவர்களாக ஆகுவதற்கான அந்த மகத்தான புரட்சியை உருவாக்குவதற்கான முயற்சிகளை செய்வது இன்று நம்மில் ஒவ்வொருவரது கடமையாக இருக்கின்றது.

எந்தப் புரட்சியை இக்காலத்தின் அழைப்பாளர் ஆன்மீக ரீதியாக நம்மிடம் உருவாக்க விரும்புகின்றார்களோ, எந்த ஆன்மீக புரட்சியையும், முஹம்மதிய மஸீஹுடன் உள்ள உறவையும், ஹஸ்ரத் சாஹிப்பஸாதா செய்யது அப்துல் லதீஃப் சாஹிப் ஷஹீது (ரலி) அவர்கள் காட்டினார்களோ அப்படிப்பட்ட ஆன்மீக புரட்சியையும் உறவையும் உருவாக்குவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். லா இலாஹ இல்லலாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவின்

செயல் வடிவமாக உருவாவதற்கு நமது எல்லா முயற்சிகளையும் செலவிட வேண்டும். அவ்வாறில்லையென்றால், 'எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள் என்று (கூறி) நம்பிக்கையின் பால் அழைக்கும் ஓர் அழைப்பவரின் குரலை நிச்சயமாக நாங்கள் செவியுற்றோம்' (3:94) என்ற முழுக்கம் பயனற்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) நம்மிடம் என்ன விரும்புகின்றார்கள்? நமது ஈமானை முழுமைப்படுத்துவதற்கு அவர்கள் நமக்கு என்ன வழியை கூறியுள்ளார்கள்? இங்கு அதை பற்றிக் கூறுகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''ஒரு நம்பிக்கையாளர் தனது ஈமானை முழுமைப்படுத்து வதற்கு தேவையான அடிப்படை விஷயம் அல்லாஹ்வின் மீதுள்ள ஈமானாகும். எதுவரை எவ்வித சுயநோக்கமும் இல்லாமல் இறைவன் மீதுள்ள அன்பு ஒருவருக்கு ஏற்படவில்லையோ, அதுவரை இந்த ஈமானும் அதன் உயர்வான தகுதி வரை சென்றடைய முடியாது". *(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 508. ரப்வாவில் அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"எவர் தன்னை அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக முழுமையாக அர்ப்பணித்து தன்னை அவனிடம் ஒப்படைத்து கொள்கையளவிலும், செயலளவிலும் அவரது நோக்கமும் குறிக்கோளும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதாகவும் அவனை மகிழ்விப்பதாகவும் இருக்கின்றதோ அவரே முஸ்லிம் ஆவார்". *(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 133, ரப்வாவில் அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பு).*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"ஒரு உண்மையான முஸ்லிம் அல்லாஹ்விடம் அன்பு கொள்கின்றார். அவனே எனக்கு பிரியமானவனும், எனது எஜமானனும் என்னை படைத்தவனும், என் மீது அருள் செய்பவனுமாவான் என்று கூறியவாறு அவனை ஏற்றுக் கொள்வதால் அந்த இறைவன் முன்னால் அவர் தனது தலையை வைத்து விடுகின்றார். உண்மையான முஸ்லிமிடம் இந்த நற்செயல்களின் விளைவாக எதுவுமே அவருக்கு கிடைக்காது. சுவர்க்கமும் கிடைக்காது; நரகமும் கிடைக்காது. சுகமும்





கிடைக்காது; இன்பங்களும் கிடைக்காது என்று கூறப்பட்டாலும் அவரால் தனது நல்ல செயல்களையும் இறைவன் மீதுள்ள நேசத்தையும் ஒருபோதும், ஒருபோதும் கைவிட முடியாது. ஏனென்றால், அவரது இறைவணக்கங்களும் இறைவனிடமுள்ள உறவும் இறைவனுக்குக் கட்டுபடுவதிலும் கீழ்ப்படிதலிலும் தன்னை மாய்த்து கொள்ளும் நிலைமையும் ஏதாவது ஒரு செயலின் விழைவை எதிர்பார்த்தோ அல்லது நற்கூலியின் அடிப்படையிலோ நற்கூலி கிடைக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புடனோ இருக்காது". *(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 133, ரப்வாவில் அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பு)*

பிறகு மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: "உண்மையான தவ்பா செய்வது உங்கள் மீது கடமையாகும். நீங்கள் உண்மை மற்றும் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வது ஆகியவற்றின் மூலம் இறைவனை திருப்திபடுத்துங்கள். அதன் மூலம் உங்களது சூரியன் அஸ்த்தமனம் ஆகாமல் இருக்கட்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 140 புதிய பதிப்பு: ரப்வாவில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, முஹம்மதிய்ய மஸீஹின் பைஅத்தில் இணைந்ததன் மூலம் அஹ்மதிகளாகிய நாம் எந்த உண்மையின் சூரியனிலிருந்தும் முஹம்மதிய்ய ஒளியிலிருந்தும் அருள்களை பெற்றுக் கொண்டு இருக்கின்றோமோ ஏனைய முஸ்லிம்கள் அந்த சூரியனுக்கு மிக அருகில் இருந்தும் கூட அதிலிருந்து பலனை பெறவில்லை. இந்த சூரியனை எப்போதும் ஒளிமயமாகவும் பிரகாரசமாவும் வைப்பதற்கும் அதிலிருந்து அருள்களை பெறுவதற்கும் இறைவனோடுள்ள தொடர்பு அவசியமானதாகும்.

இந்த தீவிரவாத சம்பவங்களுக்கு பிறகு நாங்கள் இறைவனுடன் மிக நெருங்கியுள்ளோம். எங்களது ஈமானில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற விஷயங்களை அடங்கிய கடிதங்கள் எனக்கு அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன.

இது தொடர்பாக இறை நெருக்கத்தின் மேலும் பல படித்தரங்களையும் தகுதிகளையும் கடந்து செல்வதன்பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் இப்போது நிரந்தரமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. பிறகு பாருங்கள் நமது இறைவனாகிய அந்த இறைவன் எல்லா ஆற்றல்களையும் உடைய இறைவனாவான். அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் தான், உதவிகள் செய்வதாக செய்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றியவாறு எந்த அளவுக்கு விரைவாக தனது உதவிகளின்

காட்சியை காட்டிவாறு எதிரியின் ஒவ்வொரு சூழ்ச்சியையும் அந்த எதிரியின் மீதே திருப்பி விடுகின்றான் என்பதை நீங்கள் பாருங்கள்.

இன்று வரை இந்த முஹம்மதிய மஸீஹால் நிறுவப்பட்ட இந்த ஜமாஅத்துடன் இறைவனது செயலளவிலான சாட்சிகள் இருப்பதை நாம் பார்த்துள்ளோம். மேலும் இதனை எதிரிகள் கூட ஏற்றுக் கொள்கின்றார்கள். மேலும் இதுவரை அஹ்மதிய்யா ஜமாஅத்தை பாதுகாத்து வந்த அந்த இறைவன் இதுவரை நமக்கு முன்னேற்றத்தின் புது வழிகளை காட்டிக் கொண்டிருந்தான். இப்போதும் காட்டிக் கொண்டிருக்கின்றான். இனியும் காட்டுவான் - இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இப்போது இறைவனது அருளால் இரு பிரிவினர் தோன்றியுள்ளனர். திறந்த நெஞ்சத்தோடு எவ்வாறு நமது ஜமாஅத் தான் உண்மையில் இருப்பதாக அறிந்துள்ளதோ அவ்வாறே எதிரிகள் தங்களது வரம்பு மீறிய செயல்கள் மூலமாக எல்லாவிதமான வெட்கக் கேட்டையும் பொய் கூறுவதையும் தங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளவையாக கருதுகின்றார்கள். நம்முடன் தொடர்புபடுத்தி எல்லா வகையிலும் இட்டுக் கட்டியும், பழிசுமத்தியும், கூறுவதற்கு அவர்களுக்கு அனுமதியுண்டு. இது அனுமதிக்கப்பட்டது மட்டுமல்ல. மாறாக, அவ்வாறு செய்வது நற்கூலியை பெற்றுத் தரும் ஒரு செயலாகும் என்பதை ஷய்த்தான் அவர்களது உள்ளங்களில் பதித்து விட்டான். ***(மல்பூஸாத் தொகுதி 2, பக்கம் 176, ரப்வாவில் அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பு)***

இந்த விஷயம் இன்றும் உண்மையாக இருக்கின்றது. என்னிடம் ஒருவர் இவ்வாறு கூறினார்.

லாஹூரில் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பிறகு எதிரிகளின் உறவினர்களில் ஒருவர் டாக்சியில் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்த சமயத்தில் அஹ்மதிகளின் பள்ளிவாசல்கள் மீது நடந்த துப்பாக்கி பிரயோகம் அநீதியான கொடுமையான செயல் அல்லவா? என்று ஓட்டுனரிடம் கேட்டதற்கு, 'இல்லை. முற்றிலும் சரியான காரியம்தான் நடந்திருக்கின்றது. ஏனென்றால் இந்த பள்ளி வாசலுக்குள் இந்த மக்கள் ஒரு மிகப் பெரும் அபாயகரமான வேலையை செய்து கொண்டிருந்தனர். அதன் மூலமாக முழு முஸ்லிம் சமுதாயமும் அழிந்திருக்கும் நவூதுபில்லாஹ்' என்று அந்த ஓட்டுனர் பதில் கூறியிருக்கின்றார். இதை பற்றிய அறிவில்லாத பொதுமக்களிடம்





பொய்யான கதைகளை கூறி கூறி இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் இப்படிப்பட்ட விஷயங்களை அவர்களது மூளைகளிலும் உள்ளங்களிலும் நிரப்பி விட்டார்கள். இதை தவிர இன்னும் பல விஷயங்களையும் இவர்கள் கூறியுள்ளனர். அதன் மூலம் அவற்றை காரணமாக வைத்து மீண்டும் அஹ்மதிகள் மீது அநீதி இழைப்பதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயங்களை எடுத்துக் கூறியவாறு உண்மையையும் பொய்யையும் பிரித்தறியும் தன்மையே அவர்களிடம் இல்லை என்று கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:

"அவர்களுக்கு எதிராக நாம் செய்கின்ற முயற்சிகளை முற்றிலும் கைவிட்டுவிடுவது அவசியமாகும்".

அதாவது அவர்களது குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கூறி உண்மையை எடுத்துக் கூற தேவையில்லை என்று கூறுகின்றார்கள்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"மேலும் இறைவனது தீர்ப்பின் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள்."

இப்போது இவர்களுடன் போட்டி போடுவதை விட்டு விட்டு இறைவனது தீர்ப்பின் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"எந்த அளவு நேரத்தை இவர்களது இந்த வீண் பேச்சுக்கள், ஏச்சுப் பேச்சுக்கள் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துவதில் வீணாக்குகின்றோமோ அதே நேரத்தை இஸ்திஃஃபார் செய்வதற்காகவும் (அதாவது பாவமன்னிப்பு கோருவதற்காகவும்) துஆக்கள் செய்வதற்காகவும் செலவிடுவது சிறந்ததாகும்." ***(மல்பூஸாத் தொகுதி 2 பக்கம் 176, 177 ரப்வாவில் அச்சடிக்கப்பட்ட புதிய பதிப்பு)***

அதே சமயத்தில் தப்லீக் செய்வது நமது பணியாகும். ஏனென்றால், பல நல்லியல்புள்ள மக்கள் உண்மையை அறிய விரும்புகிறார்கள். எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு நாம் வழிகாட்ட வேண்டும். இந்த

சம்பவங்களை பார்த்த பிறகு தாமாகவே அவர்கள் நம்மிடம் வரவும் செய்கிறார்கள். எனவே, இந்த பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆனால், சில மக்கள் கருதுவது போன்று இந்த மவ்லவிகளை எதிர்த்து நிற்பதற்காக இவர்களது ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு ஏச்சுபேச்சுக்கும் நாம் பதில் கூறவேண்டும் என்பது தவறான விஷயமாகும். நீங்கள் உங்களது ஆற்றல்களை வீணாக்குவதற்குப் பகரமாக இந்த நேரத்தை துஆக்கள் செய்வதிலும் இஸ்திக்ஃபாரிலும் (பாவமன்னிப்பு கோருவதிலும்) கழியுங்கள். ஏனென்றால், இந்த கீழ்த்தரமான தீய ஆலிம்களிடம் வாக்குவாதம் செய்யத் தேவையில்லை. அவர்களுக்கு உணவு இல்லாமற்போய்விடும் நிலை இருப்பதால் அவர்கள் ஏற்றுக்கொள்ள போவதில்லை.

நாம் துஆக்கள் செய்வதிலும் இஸ்திக்ஃபாரில் ஈடுபடுவதிலும் அதன் உரிமைகளை நிறைவேற்றியவாறு முழுமையாக அதில் ஒன்றிவிட்டால், மேலும் முஹம்மதிய்ய மஸீஹின் கட்டளைகளின் மீது உண்மையான முறையில் செயலாற்றினால், இந்த காலத்தின் இமாம் நம்மிடம் உருவாக்க விரும்புகின்ற மாற்றங்களை நாம் நம்மிடம் உருவாக்கினால், நமது இரவுகளை துஆக்களினால் அலங்கரித்தால், இஸ்திக்ஃபார் செய்தவாறு இறைவன் முன்னிலையில் குனிந்திருந்தால் பிறகு உண்மையில் ஜமாஅத்தின் அடித்தளங்களை பலவீனமாக்குவதற்காக செய்யப்படும் எதிர்ப்புகளும் கொடுமைகளும் ஜமாஅத்தின் முடியை கூட அசைக்க முடியாது. நிச்சயமாக இந்த எதிர்ப்புகள் ஜமாஅத்திற்கு வெற்றியின் வடிவில் கனிகளை வழங்கும். கண்டிப்பாக அந்தக் கனிகள் கிடைக்கும். இப்போதும் அவை கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான முயற்சிகளை செய்த பிறகும் ஜமாஅத் பூத்துக்குலுங்குவதையும் வளர்ச்சி அடைவதையும், உலகின் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. நமது உண்மையான வணக்கத்திற்குரியவனுடன் உள்ள உறவு வலுவடைந்து அது வளர்ச்சியடைந்து கொண்டே செல்லும் போது ஜமாஅத்தின் மகத்தான வெற்றியை நாம் நமது வாழ்வில் பார்க்க முடியும்.

நமது பொருள்களுக்கு ஏற்படும் இழப்பு நம்மை நமது மார்க்கத்திலிருந்தும் பின்தங்க வைத்துவிடும் என்று நினைக்கின்ற எதிரி மிகப்பெரும் முட்டாளாவான். நமக்கு ஏற்படும் உயிர் இழப்புகள் நமது ஈமானில் பலவீனத்தை உருவாக்கி விடும் என்று கருதுகின்ற





நமது எதிரி குறைந்த அறிவுள்ளவனும், சிந்தனை திறனற்றவனாகவும் இருக்கின்றான்.

நாம் கண்ட காட்சி என்னவென்றால் தந்தை ஷஹீதான பிறகு அவரது ஒன்பது அல்லது பத்து வயதுடைய மகனை அவரது தாய் அதற்கடுத்த ஜுமுஆவிலேயே ஜுமுஆ தொழுவதற்காக பள்ளிவாசலுக்கு அனுப்பி வைக்கின்றார். உமது தந்தை ஷஹீதான அதே இடத்தில் நின்று நீ ஜுமுஆ தொழுகையை தொழவேண்டும் என்று மகனிடம் சொல்லி அனுப்புகின்றார். இதன் மூலம் உனது மூளையில் எனது தந்தையார் ஒரு மகத்தான நோக்கத்திற்காக ஷஹீதாகியுள்ளார். இதன் மூலம் மரணம் எங்களது உயர்வான நோக்கத்தை நாங்கள் அடைவதிலிருந்து எங்களை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது என்ற இந்த உணர்வு உன்னிடம் இருக்க வேண்டும் என்று அந்த தாய் தன்னுடைய மகனிடம் கூறியுள்ளார்.

எங்கு இப்படிப்பட்ட மகன்கள் பிறப்பார்களோ, மேலும் எங்கு இப்படிப்பட்ட தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்கு தர்ப்பிய்யத் வழங்குவார்களோ அந்த சமுதாயங்கள் ஒருபோதும் மரணத்திற்கு அஞ்சுவதில்லை. எந்த எதிரியும் எந்த உலக சக்தியும் அவர்களது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது.

இந்தப் பொருள் இழப்புகள், உயிர் இழப்புகள் ஏற்படும் என்ற தகவலை இன்றிலிருந்து ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பே நமது இறைவன் நமக்கு கூறிவிட்டான். மேலும் நமது எஜமானரான ஹஸ்ரத் காதமுல் அன்பியா முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களது சஹாபாக்களின் செயல்மூலமாக இதன் முன்னுதாரணங்களையும் நிலைநாட்டிவிட்டான். மேலும் பின்னவர்களை முன்னவர்களுடன் இணைத்து இந்த முன்னுதாராணங்களை பின்னவர்களும் நிலைநாட்டுவார்கள் என்பதை தெளிவுப்படுத்தி விட்டான்.

பிறகு பொறுமையாளர்களுக்கு நற்செய்தி கூறுவீராக (2:156) என்று கூறி பின்னவர்களுக்கும், இந்த தியாகங்களுக்கு பகரமாக சுவர்க்கம் மற்றும் வெற்றிகளின் நற்செய்தியை தெரிவித்துள்ளான்.

ஜமாஅத்தின் தியாகங்களின் வடிவில் வெளிப்பட்டுள்ள இந்த சம்பவங்கள் எவ்வாறு முன்னரைவிட அதிகமாக நம்மை இறைவன் பக்கம் ஈர்த்துள்ளதோ அத்தகைய உணர்விலும் ஈமானின் சூட்டிலும் அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ள நமது அழுகையிலும்

மன்றாடல்களிலும் நம்மிடம் தூய மாறுதல்கள் ஏற்படுவதற்காக நாம் செய்யும் முயற்சிகளிலும் ஒருபோதும் பலவீனம் ஏற்பட விட்டுவிடாதீர்கள்; அவற்றில் ஒருபோதும் பலவீனம் ஏற்பட விட்டுவிடாதீர்கள். தங்களது உயிர்களை தியாகம் செய்து நமக்கு வாழ்வின் புதிய வழிகளை காட்டித் தந்த நமது சகோதரர்களின் தியாகங்களை ஒருபோதும் மரணிக்க விட்டுவிடாதீர்கள். நாம் நமது சிந்தனைகளையும் செயல்களையும் இத்தகைய வழிமுறைக்கேற்ப கொண்டு சென்றால் வழக்கத்திற்கு மாற்றமான அல்லாஹ்வின் உதவிகளின் காட்சிகளையும் நாம் பார்ப்போம் - இன்ஷா அல்லாஹ், மேலும் அலா இன்ன நஸ்ரல்லாஹி கரீப் நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி அருகில் உள்ளது (2:215) என்ற உயிரூட்டக்கூடிய மகிமை நிறைந்த குரலையும் நாம் கேட்போம். நிச்சயமாக நாம் உமக்கு மிகத்தெளிவான ஒரு வெற்றியினை வழங்கியுள்ளோம் (48:2) என்ற நற்செய்தியையும், நாம் நமது கண்களால் பார்ப்போம்.

எனவே, இறைவன் முன்னால் குனிந்து விடுங்கள். எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனான துஆக்களை ஒப்புக்கொள்கின்ற அந்த இறைவன் முன்னால் அவனது அரியணையை அசைக்கின்ற அளவில் கதறி மன்றாடுங்கள். அல்லாஹ் எனக்கும், உங்களுக்கும் அத்தகைய துஆக்களை செய்கின்ற நற்பேற்றை வழங்குவனாக.

அல்லாஹ்வே! பலவீனமானவர்களாக இருக்கும் எங்களுக்கு எங்களிடம் எல்லா விதமான பலவீனங்கள் இருந்தும்கூட ஒவ்வொரு நொடியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மை பேரன்பரான உன்னுடைய மஸீஹிடம் நீ செய்த வாக்குறுதிகள் நிறைவேறும் காட்சியை காட்டிக்கொண்டே இருப்பாயாக! எங்களுடைய பலவீனங்களை கண்டும் காணாமல் விட்டு விடுவாயாக! எங்களது பாவங்களை மன்னிப்பாயாக!

எங்களை உனது கருணையின் மடியில் அமர வைப்பாயாக! எந்த ஒரு சோதனையும், எந்த ஒரு பரீட்சையும் எங்களது ஈமானில் பலவீனம் ஏற்பட காரணமாக இல்லாதிருக்கட்டுமாக. எங்களது நம்பிக்கைகளில் முன்பைவிட அதிகமாக வலிமையை வழங்குவாயாக. எங்களது குற்றங்களையும், குறைகளையும் திரையிட்டு மறைப்பாயாக! எதிரிகள், நயவஞ்சகர்கள் ஆகியோரின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக! எதிரிகள் மீது எங்களுக்கு வெற்றியை





வழங்குவாயாக! 'எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத் தன்மையைத் தந்தருள்வாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்தி வைப்பாயாக! நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக' (2:251)

இப்போது நாம் துஆ செய்வோம். துஆக்களில் நமது எல்லா ஷஹீதுகளையும் அவர்களது குடும்பத்தையும் நினைவில் கொள்ளுங்கள். இறைவழியில் கைதானவர்களையும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக.